நாட்டினுடைய மிகப் பெரிய தொழிலதிபர் நடத்துகின்ற தொழிற்சாலை. அது வேண்டுமென்று உங்களுடைய முதலமைச்சரிலிருந்து, உங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் வரை, அத்தனை பேரும் கல்கத்தாவிற்குப் போய் தவம் கிடக்கவில்லையா? அதை நாங்கள் தவறென்று சொல்லவில்லை. தொழில் வளர வேண்டும், தொழில் முனைவோர் வர வேண்டும், மின்சாரம் வேண்டும். அதேநேரத்திலே நம்முடைய பொது நிறுவனங்களை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறதேயொழிய, தனியாருக்கு நாங்கள் வால் பிடிக்கிறோம்; தனியாருக்காகத்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்கிற கருத்தை நீங்கள் பதிவு செய்தால், அதை மறுக்கவேண்டிய அரசியல் கடமை எங்களுக்கு உண்டு. அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள் சார், உட்காருங்கள்.

5. வெளியேற்றப்பட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் கலந்துகொள்ள அனுமதித்தல்

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிடுவோம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு பற்றி நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களை இன்றைக்கு நீங்கள் வெளியேற்றியிருக்கின்றீர்கள். அவர்களைத் திரும்பவும் அழைத்து, இந்த விவாதத்திலே பங்குகொள்ளச் செய்வதன்மூலமாக ஜனநாயகக் கடமையை அவர்கள் ஆற்ற அனுமதிக்க வேண்டும். அதற்காகத் திரும்பவும் அவர்களை இந்த மன்றத்திற்கு அழையுங்கள் என்று காங்கிரஸ் கட்சி வேண்டுகோள் வைக்க விரும்புகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகள் தனியார். . . (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார். அதை முடித்துவிட்டு வருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். இன்றையதினம் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் . . . (குறுக்கீடு) திரு. மணி, இந்த subject-ல் பேசுகிறீர்களா? சரி, பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வரலாறு காணாத மின்வெட்டு மிகப் பெரிய பிரச்சினை. பிரதான எதிர்க்கட்சி அ.இ.அ.தி.மு.க. இல்லை. அவர்களும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் அவர்களை அனுமதிக்க வேண்டும்; அழைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை என்ற அடிப்படையிலேதான் 2 தினங்கள் தள்ளி இன்றையதினம் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மணி 1-07 துணை நிதிநிலை அறிக்கை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. நிகழ்ச்சி நிரலில் தினசரி வந்துகொண்டே இருக்கிறது, "விவாதம்-தொடர்ச்சி" என்று. விவாதமே தொடங்கவில்லை; அப்புறம் ஏது தொடர்ச்சி என்று தெரியவில்லை. இருந்தாலும், இந்த மின்சாரம் பற்றிய தீர்மானத்திலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டும். அதற்குரிய முறையிலே நம்முடைய அமைச்சர் பதிலளிப்பது பொருத்தமாக இருக்கும். அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் பங்கெடுப்பதற்கு, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, அவர்களை அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதால், பேரவை விதி 120-ன்கீழ் பேரவையிலிருந்து வெளியேற்றுமாறு கட்டளையிட்டேன். அதன்படி வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு மீண்டும் வரக்கூடாது என்று விதிகளிலே கூறப்பட்டிருந்தாலும், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் இன்று கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டு—தொடர்ச்சி

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை, தனியார்மயத்தை முழுவதுமாக நாங்கள் எதிர்க்கவில்லை. அது புரியாமல் இல்லை. ஓட்டல் என்று சொன்னால், தமிழ்நாடு ஓட்டலைதான் அரசாங்கம் நடத்த முடியும், இருக்கிற சிறு, குறு, நடுத்தரத் தொழிலதிபர்கள் நடத்தக்கூடிய நிறுவனங்கள், நடத்தக்கூடிய தனியார் ஓட்டல்களையெல்லாம் மூடு என்று நாங்கள் சொல்லவில்லை. இராணுவத்தைத் தனியாருக்குக் கொடுக்க முடியாது. அதை நம்முடைய சகோதரர் ஒத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன். அணு உலையிலே மின்சாரம் தயாரிக்க தனியாருக்குக் கொடுக்கமுடியாது. ஏனென்றால், அதுவும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. ஆகவே, மின்சாரம் என்பது அத்தியாவசிய தேவை. அது பொதுத் துறையைச் சார்ந்திருக்கவேண்டும். அதில் சமூகக் கண்ணோட்டம் இருக்கவேண்டும். ஆகவே, மின்சாரத்தைத் தனியாருக்குக் கொடுக்கவேண்டாம் என்றுதான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சிறப்புக்கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

பொதுவாக, இப்போது தமிழகம் இருளில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளை, அன்றாட பத்திரிகைகளை நாம் பார்த்தால், தினமும் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குடிக்கிற தண்ணீரிலிருந்து வேலைவாய்ப்பிலிருந்து அனைத்துமே கடுமையாக இந்த மின்வெட்டின்